# இரண்டாம் பருவத் தொகுத்தறிவுத் தேர்வு

## தமிழ்

மதிப்பெண்: 60

வகுப்பு - ஆறு

நேரம்: 2 மணி

---

I. **ஆ) சரியான விடையைத் தேர்வு செய்து எழுதுக.** **8 × 1 = 8**

1. மாணவர்கள் நூல்களை ________________ கற்க வேண்டும்.

   அ) மாசுற  ஆ) மாசற  இ) மேலோட்டமாக

2. தவறான சொல்லை எழுதுக.

   அ) வென்ரான்  ஆ) கண்டான்  இ) நண்டு

3. பிறரிடம் நான் ________________ பேசுவேன்.

   அ) கடுஞ்சொல்  ஆ) வன்சொல்  இ) இன்சொல்

4. உதித்த என்ற சொல்லிற்குரிய எதிர்ச்சொல் ________________

   அ) மறைந்த  ஆ) குறைந்த  இ) தோன்றிய

5. கதிர் முற்றியதும் ________________ செய்வர்.

   அ) உரமிடுதல்  ஆ) அறுவடை  இ) களை எடுத்தல்

6. நிலையான செல்வம் ________________

   அ) பணம்  ஆ) ஏக்கம்  இ) ஊக்கம்

7. அஞ்சும் சமர்களத்தில் வெளிப்படும் குணம் ________________

   அ) பயம்  ஆ) வீரம்  இ) மகிழ்ச்சி

8. வீட்டுப் பயன்பாட்டிற்காகப் பொருள் வாங்குபவர் ________________

   அ) நுகர்வோர்  ஆ) தொழிலாளி  இ) முதலீட்டாளர்

**ஆ) பின்வரும் சொற்களைச் சேர்த்தெழுதுக.** **2 × 1 = 2**

9. அ) பயன் + இலா  ஆ) அடிக்கும் + அலை

**இ) பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக.** 2 × 1 = 2

10. அ) படிப்பறிவு ஆ) கண்ணுறங்கு

**II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

11. நாம் யாருடன் சேரக் கூடாது?
12. காமராசர் காலத்தில் தொடங்கப்பட்ட கல்வி நிறுவனங்கள் யாவை?
13. நாம் யாருடன் நட்புக் கொள்ள வேண்டும்?
14. மாமல்லபுரம் எப்படி உருவானது? அதற்குக் காரணமான நிகழ்வு யாது?
15. மயங்கொலி எழுத்துகள் யாவை?
16. நான்கு நிலங்கள் என்பவை யாவை?
17. வணிகம் என்றால் என்ன?

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** 3 × 3 = 9

18. காமராசரின் மதிய உணவுத் திட்டம் குறித்து எழுதுக.
19. இன எழுத்துகள் என்றால் என்ன?
20. ஆசாரக் கோவை கூறும் எட்டு வித்துகள் யாவை?
21. தமிழன் தான் வாழ்ந்த நாட்டினை எவ்வாறு உருவாக்கினான்?
22. சிறு வணிகம், பெரு வணிகம் – வேறுபடுத்துக.

**IV. எவையேனும் ஒன்றனுக்கு விடையளி.** 1 × 5 = 5

23. அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பற்றிச் சுருக்கமாக எழுதுக.

(அல்லது)

உழைப்பே உயர்வு தரும் என்ற கதையைச் சுருக்கி எழுதுக.

**V. மனப்பாடப் பகுதி.** 4 + 2 = 6

24. ‘விடிவெள்ளி’ எனத் தொடங்கும் ‘கடலோடு விளையாடு’ என்ற பாடலை அடிமாறாமல் எழுதுக.
25. ‘விருந்து’ என முடியும் திருக்குறளை அடிமாறாமல் எழுதுக.

**VI. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளி.** 5 × 2 = 10

26. பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக.

அ) தென்றல் ஆ) கன்டம்

இ) நன்ரி ஈ) மன்டபம்

27. தொகைச் சொற்களை விரித்து எழுதுக.

அ) முக்கனி ஆ) முத்தமிழ்

28. கலைச்சொல் தருக.

அ) welcome ஆ) consumer

29. சொற்றொடர் அமைத்து எழுதுக.

அ) மனமாற்றம் ஆ) பொங்கல்

30. கோடிட்ட இடத்தை நிரப்புக.

அ) காமராசரைக் கல்விக்கண் திறந்தவர் என மனதாரப் பாராட்டியவர் __________

ஆ) செயல் நடக்க இருப்பதைக் குறிப்பது __________

31. பொருள் வேறுபாட்டை எழுதுக.

அ) இரை ஆ) இறை

32. சொல் பொருள் தருக.

அ) தேசம் ஆ) பண்

இ) கழனி ஈ) கதிர்ச்சுடர்

**VII. அ) சரியான விடையைத் தேர்வு செய்க.** 4 × 1 = 4

33. அ) சிரம் என்பது __________ (தலை / தழை)

ஆ) வண்டி இழுப்பது __________ (காளை / காலை)

இ) பறவை வானில் __________ (பறந்தது / பரந்தது)

ஈ) இலைக்கு வேறு பெயர் __________ (தளை / தழை)

**ஆ) சரியான சுட்டு விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** $4 \times \frac{1}{2} = 2$

34. அ) என் வீடு __________ உள்ளது. (அது / அங்கே)

ஆ) தம்பி __________ வா (இவர் / இங்கே)

இ) நீர் __________ தேங்கி இருக்கிறது? (அது / எங்கே)

ஈ) யார் __________ தெரியுமா? (அவர் / யாது)

**VIII. கீழ்க்காணும் தொடர்களுக்கு உரிய இன எழுத்துச் சொற்களை எடுத்து எழுதுக.** $4 \times \frac{1}{2} = 2$

35. அ) யானையிடம் உள்ளது __________

ஆ) மெத்தையினுள் இருப்பது __________

இ) குளிர்ந்த காற்று __________

ஈ) வளையில் இருப்பது __________

(பஞ்சு, நண்டு, தென்றல், தந்தம், தங்கம், பம்பரம்)